Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.56/2016

Deposition of witness for: PW - 11

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரபாகரன் | Father/Husband Name | : மீனாட்சிசுந்தரம் |
| Age | : | Calling | : |
| Date | : 12.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 12day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிஆஜர்

அரசுதரப்பு சாட்சியை கூடுதல் சாட்சியாக விசாரிக்க மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற அழைப்பாணை மூலம் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறார்.

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி 2023ம் வருடம் பணி ஒய்வு பெற்று தற்போது சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 15.04.2013ம் தேதி கொட்டாம்பட்டி காவல் ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது 08.01.2013ம் தேதி கொட்டாம்பட்டி சார்பு ஆய்வாளர் திரு.சடச்சி கருப்பணன் அவர்கள் பதிவு செய்திருந்த குற்ற எண் 4/2013க்கான வழக்கை ஆய்வு செய்த திரு,இளங்கோவன் புலன்விசாரணை செய்து அவர் பணிமாறுதலில் செல்லும் போது அப்போதைய மேலூர் காவல் நிலைய வட்ட ஆய்வாளர் திரு.ஆவுடையப்பனிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்து சென்றுள்ளார். நான் கொட்டாம்பட்டி காவல் ஆய்வாளராக பணி பொறுப்பை மேற்கொண்டவுடன் மேற்படி மேலூர் வட்ட ஆய்வாளர் திரு.ஆவுடையப்பனிடமிருந்து பெற்ற வழக்கு கோப்பை பார்வையிட்டு

நான் தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2) மேற்படி வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்ததில் ஏற்கனவே விசாரித்த காவல் ஆய்வாளர் திரு.இளங்கோவனிடம் சொன்ன விவரத்தை சொன்னதனால் நான் தனியாக வாக்குமூலம் தயார் செய்யவில்லை, நான் ஆவணங்களை பரிசிலனை செய்து எனது புலன்விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 406, 420, 465, 468, 471, 379 இதசன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் இந்த வழக்கில் குற்ற இறுதி தாக்கல் செய்தபோது சாட்சிகளை நான் விசாரணை செய்தபோது அவர்கள் எனக்கு முன்னர் விசாரணை செய்த ஆய்வாளரிடம் சொன்ன விவரத்தைதான் என்னிடமும் சொன்னதனால் நான் சாட்சிகளின் வாக்குமூலத்தை பதிவு செய்யவில்லை என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. குற்ற இறுதி அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றால் சரியல்ல. அதேபோல் இந்த வழக்கினை ஆய்வாளர் திரு.இளங்கோவன் அவருக்கு பின்னர் வந்த ஆய்வாளர் ஆவுடையப்பனிடம் வழக்கின் கோப்புகளை ஒப்படைத்தார் என்ற விவரத்தை நான் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் அரசு தரப்பில் குவிமுச பிரிவு 311 ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் நகலை எதிரிக்கு அரசுதரப்பில் வழங்கவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3) நான் இவ்வழக்கு ஆவணங்களை நன்கு படித்து பார்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிகையில் உள்ள பட்டியல் சாட்சிகளில் எனது பெயர் மற்றும்

ஆய்வாளர் திரு.ஆவுடையப்பன் பெயர் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும், எனக்கும், ஆய்வாளர் ஆவுடையப்பனுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி அவரது ஊரில் எந்த ஒரு எதிர்ப்பும் இல்லாமல் பல வருடங்களாக பஞ்சாயத்து தலைவராக இருந்து வருகிறார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கு குறித்து எந்த ஆவணங்களையும் நிபுணத்துவ பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான், எனக்கு முன்பு புலன்விசாரணை செய்த ஆய்வாளர் திரு.இளங்கோவனுக்குத்தான் தெரியும். எனக்கு நீதிமன்ற வாசலில் வைத்து தான் அழைப்பாணை கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, சிங்கம்புணரியில் நேரடியாக வந்து என்னிடம் அழைப்பாணை கொடுத்து அழைக்கப்பட்டேன்.

4) இந்த வழக்கிற்கும் எனக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கனிம மற்றும் சுரங்கங்கள் ஏலத்தில் பல பண பலம் வாய்த்தவர்கள் ஏலத்தில் பங்கு பெற்று, அரசாங்கத்திற்கு பல லட்சங்கள் நஷ்ட ஏற்படுத்தியதை ஆஜர் எதிரி அரசாங்கத்திற்கு தெரிவித்ததனால் அவர்கள் எதிரி மீது பொய்யான புகார் கொடுத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.